சார்பு நீதிமன்றம், குளித்தலை
MCOP.NO. **586 / 2019**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **ம.சா.1** வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை – II திருமதி.அம்சவள்ளி அவர்களால் 44/1969 பிரிவின்படி 02.01.2025 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்: முருகேஸ்வரி | கிராமம் : |
| க/பெ: | வட்டம் : |
| மதம் : | தொழில்: |
| ஜாதி : | வயது : |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் – ம.சா.ஆ.1. பிரேத பரிசோதனை அறிக்கை சான்றிட்ட நகல் – ம.சா.ஆ.2. வாரிசு சான்றிதழ் அசல் – ம.சா.ஆ–3. மோட்டார் வாகன ஆய்வறிக்கை – ம.சா.ஆ.4. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

எனது கணவர் விபத்து சமயத்தில் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டு நிறுவனத்தினை தரப்பினராக சேர்க்கவில்லை என்பதால் மனு குறைபாடு உடையது என்றால் சரியல்ல. யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது. எனது கணவர் இருசக்கர வாகனத்தை கவனக்குறைவாக ஓட்டி முன்னால் சென்ற வாகனத்தின் பின்பகுதியில் மோதி விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. மேற்படி விபத்திற்கு எனது கணவர் தான் காரணம் என்றாலும் முதல் எதிர்மனுதாரர் பொறுப்பாளி இல்லை என்றாலும் சரியல்ல. எனது கணவரின் தொழில், வயது, வருமானம் ஆகியவற்றை நிரூபிக்கக்கூடிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் என்னால் உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு மிக அதிகமானது என்றால் சரியல்ல. 2ம்

எதிர்மனுதாரருக்கு எதிராக இம்மனுவானது தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/– (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.